Two Essays on Tamil.

BY

T. Ramalingam Pillai M. A.,
Head Translator to the Government of Travancore

WITH

AN INTRODUCTION

BY

M. R. Ry. K. G. Sesha Aiyer Avl., B.A., B.L.,
Retired High Court Judge, Trivandrum.

COPYRIGHT] [PRICE As. 2.

TRIVANDRUM:
Printed at the Anantha Rama Varma Press.

தமிழைப் பற்றிய

இரண்டு கட்டுரைகள்.

ஆக்கியோன்

T. இராமலிங்கம் பிள்ளை, எம். ஏ.,

திருவிதாங்கூர் அரசாங்கத்தலைமை மொழிபெயர்ப்பாளர்,

தமிழில் 'அன்னபூர்ணாலயம்' (அச்சியற்றிவருகிறது) என்னும் நவீனம், 'சமுதாய அமைப்புக்களின் தலைநோக்கங்கள்' என்னும் கட்டுரை, மலையாளத்தில் 'பத்மினி: பாரதீய நவீனம்', 'ஷேக்ஸ்பியர்: பன்னிரண்டு ஸ்திரீரத்னங்கள்', 'சிந்தாசகலங்கள்', ஆங்கிலத்தில் 'Aryabhata or The Newton of Indian Astronomy', 'Horrors of Cruelty to Animals', 'The Evolution of the Malayalam Drama', 'The Development of Greek Philosophy' முதலிய நூல்களின் ஆசிரியர்.

Copyright.] 1926. [விலை அணா 2

INTRODUCTION.

It is just thirty years since I came to know Mr. T. Ramalingam Pillai, then a student at College, as a young man possessing a pronounced aptitude for linguistic studies. He has since then read much in English, Tamil and Malayalam; and his high scholarship in those languages can be easily seen from his numerous contributions to literary Journals and the books and pamphlets he has written. He has recently been studying Sanskrit and Telugu in addition.

The two addresses contained in this pamphlet were delivered by Mr. Ramalingam Pillai to High School pupils. As a Tamilian by birth and as one who specially studied Tamil language and literature as a subject for his M. A. degree, he is naturally proud of Tamil and he is eminently qualified to tell our youths the beauty of that great and ancient language and the necessity for its study. Though Tamil has now come to be regarded in the Chera country as a veritable cinderella among the languages taught in schools, no one possessing the least acquaintance with South Indian philology and South Indian culture will question the indisputable claims of Tamil for better recognition and study in our educational institutions. Mr. Ramalingam Pillai has done well in making this appeal to students and I trust it will prove effectual, as it deserves to prove.

Taikad,
Trivandrum,
26th December 1926.

K. G. SESHA AIYAR.

Tamil And Students.*

தமிழும் மாணவர்களும்.

கனம் சபாநாயகர் அவர்களே, சகோதரர்களே,

இன்றிரவு பேச ஏற்பட்ட பொருள் 'தமிழும் மாணவர்களும்' என்பது பற்றியதாகும். பொதுவாக 'மாணவர்கள்' எனக் கூறினேன் எனினும் சிறப்பாக 'இந்நாட்டு மாணவர்களை'க் குறித்துக் கூறப்போகிறேனென்பது சொல்லாமலே விளங்கும்.

தமிழ் மொழியின் தொன்மையையும் சுவையையும் சிறப்பையும் பெருமையையும்பற்றிக் கூறுமுன், அம்மொழிக்கும் நம் நாட்டிற்குமுள்ள தொடர்பைக் குறித்துச் சற்று ஆராய்வாம். "கற்பிற்கரசியாகிய கண்ணகியின் புண்ணிய சரித்திரம் அடங்கிக் கிடத்தலினாலேயே இம்மை மறுமைக்குரிய எல்லா நலன்களையும் அளிப்பதென ஆன்றோரால் போற்றப்படுகின்ற" சிலப்பதிகாரமென்னும் தொன்னூல் தென்னாட்டு மூவேந்தர்களில் சிறப்புவாய்ந்த சேர நாட்டிளவரசரான இளங்கோவடிகள் என்பவரால் இபற்றப்பெற்ற ஓர் பெரும் காப்பியமாம். இப்பெரியாரை ஈன்றெடுத்த பாக்கியம் எந்நாட்டுக்குளது? அஃது நன்னாடாகிய நம் வஞ்சிநாட்டுக்குரியதன்றோ? நவீன நாடக நடையில் வரையப்பெற்ற முதனூலாகிய "மனோன்மணீயம்" எந்நாட்டவரால் எழுதப்பெற்ற

---

* திருவனந்தபுரம் St. Joseph's School Week என்னும் வாரக்கொண்டாட்டத்தையொட்டி 1925-ஆகஸ்ட்-மீ 21-உ நடைபெற்ற அப்பள்ளிக்கூடத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் கலாசாலை Science Professor R. ஸ்ரீநிவாஸன் எம். ஏ., அவர்கள் தலைமையின் கீழ் இஃது வாசிக்கப் பெற்றது.

து? கொடுமலையாளக் குடியிருப்பினராயிருந்தும் தற்காலத் திய தமிழகத்திற்கு ஓர் திலகம்போல் விளங்கா நின்ற சீழ் நாட்டு மேல் நாட்டு வேதாந்தப்பேரறிஞர், காலஞ்சென்ற திருவாளர் ராவ் பகதூர் எம். ஏ. சுந்தரம் பிள்ளை அவர்களே இவ்வரும் பெரும் நூலின் ஆசிரியர். அன்னாரை ஈன்றெ டுத்த பேறும் வஞ்சி நாட்டுக்குடையதே. ஆகவே தொன் று தொட்டு இது காறும் வஞ்சி நாட்டிற்கும் தமிழுக்கும் ஓர் தொடர்பு நிறுவியிருக்கின்றது. இம்மண்ணுலகு நிலை நிற் கு நாளளவும் இத்தொடர்பு நீங்காது. நாம் மலையாள நாட் டைச்சேர்ந்தவராகிலும் நம தாய்மொழி தமிழ்மொழியே. தமிழ் மக்கட்குத் தாய் மொழி தமிழாயின், மலையாளமை யைத் தாய் மொழியாய்க் கொண்டவர்கட்கு நம்மொழி தாய் பாஷையின் தாய்பாஷையன்றோ? அஃதாவது, தமிழ் அன் னரது 'பாட்டி பாஷை' யென்று கூறலாகும். ஆகவே, எவ் வகையானும் தமிழை ஆதரித்தல் வஞ்சி நாட்டாரின் முதற் பெருங் கடமையாகும். மலையாள நாட்டை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஆண்ட சேரமான் பெருமாள் நாய னாரும் தமிழரே. "பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து அஃதாவது 700 ஆண்டுகளாக மலையாளத்திலிருந்த தமிழ் மக்கள் தமிழைப் பாதுகாவாது கைந்நெகிழவிட்டு, தமிழில் வடமொழிச் சொற்கள் ஏராளமாகக் கலக்க இடந்தந்தமை யினாலேயே இப்போது அது தனி மொழி போன்று வழங் குகின்றது."

தமிழ் மக்கள் யாவர்?

தமிழ் என்னும் மொழிக்குரியோர் தமிழர் எனப்படு வர். தமிழ் மக்கள் யாவர்? தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களே தமிழ் மக்கள். மக்களை ஒற்றுமைப் படுத்துவது, சாதாரணமாக, ஓர் பொது மொழியும், ஓர் பொ து நாடும், ஓர் பொது சமயமும், பொதுவான வழக்க ஒழுக்

கங்களுமேயாம். இந்நான்கினும் முதன்மை பொதுமொழிக்கே உளது. எச்சமயத்தைச் சார்ந்தவரானாலும் எவ்வகுப்பிலுட்பட்டவரானாலும் ஓர் பொது மொழியைத் தம் தாய் மொழியாகக் கொண்டவர்கள், பாஷையை அடிப்படையாக்கி நோக்குங்கால், ஓரினத்தவரேயாவர். தாய் மொழிப் பற்றானது சமய எல்லை, நாட்டெல்லை முதலியவைகளைக்கடந்து நிற்கின்றது. சமயவேற்றுமையும் வர்ண வேற்றுமையும் அதற்கு அரணாகா. வீரமாமுனிவர் என்னும் புனைப் பெயர் பூண்ட (Father Beschy) என்ற இத்தாலியத் துறவியின் காப்பியமான 'தேம்பாவணி' போன்ற செந்தமிழ் நூல்களைத் தமிழ்ப்பற்றுடைய இந்துக்களும் பேரவாவுடன் கற்று வருகின்றனர். மற்றோர் கிறிஸ்தவரான திருவாளர் வேதநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்களையும் நவீனங்களென்னும் உரைநடை நூல்களையும் இந்துக்கள் இன்றும் என்றும் பாராட்டுகின்றனர். முகம்மதியர்களில் சீரும் சிறப்பும் வாய்ந்த பல பல தமிழ்நூலாசிரியர்களும் புலவர்களும் எந்நாளும் இருந்து வருகிறார்கள். கிறிஸ்தவசமயக் குரவர்களான போப்பையரும் பாப்லி ஐயரும் (Rev. Dr. G. U. Pope and Rev. Popley, B. A.,) தமிழ்த் தெய்வத்தை மிகவும் கொண்டாடியிருக்கின்றனர். தங்களது தாய் மொழியாகிய ஆங்கிலத்தைப் போலவே, அல்லது அதைவிடச் சற்று அதிகமாகவே, நம் தென்மொழியை அவர்கள் விரும்புகின்றனர். தம் சமயக்கோட்பாடு எவ்வாறிருந்தாலும் நம் மணிவாசகப் பெருமானது திருவாசகத்தை போப்பையர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆங்கில உலகிற்கு அதன் பெருமையை எடுத்து விளக்கியிருக்கின்றனர். ஆகவே, மக்கள் எந்தெந்த நாட்டில் வசித்தாலும் எந்தெந்த சமயத்தைப் பின்பற்றினாலும் ஓர் மொழி பற்றி அவர் ஓரினத்தாராயிருக்கலாமென்பது சரித்திர உண்மையாகும். பௌத்

தர்கள், சமணர்கள், என்பாரும் பெருந்தமிழ்ப் புலவர்களா யிருந்தார்களன்றோ? சைவசமயத்தாரின் தமிழ் நூல்களை மேற்கூறிய சமயத்தாரும் அது போன்றே அன்னாரது தமிழ்நூல்களை சைவசமயத்தாரும் பாராட்டி வந்திருக்கின்றனர். தற்காலத்தில் ஆரியத்திராவிட அல்லது பிராமண அப்பிராமணக்கட்சி வழக்குகள் எவ்வாறிருப்பினும், எக்காலத்திலும் உயரிய தமிழ் நூல்கள் எவ்வருணத்தாரால் வரையப்பெற்றபோதிலும் யாதொரு வருண வேற்றுமையுமின்றித் தமிழுலகத்தால் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமியையும் மணிவாசகப் பெருமானையும் சுந்தரமூர்த்தி நாயனாரையும் திருநாவுக்கரசையும் யாதொரு வேற்றுமையுமின்றித் தமிழுலகம் ஆதரிக்கின்றதன்றோ? சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் அருட்பாக்களை விரும்பாததென்னாட்டுப் பார்ப்பனரு முண்டோ ? இல்லையென்பதே அடியேனது துணிபு. பிரம்மஸ்ரீகளான வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் நூல்களையோ. இராஜமய்யரின் நூலையோ அ. மாதவையாவின் நவீனங்களையோ படித்து இன்புறாத தனித்தமிழரு முளரோ ? இல்லையென்றே கூறுவேன்.

தாய்மொழிப் பற்று ஏனைய சிந்தைகட்கெல்லாம் முன்னிற்கும் என்பதற்குச் சான்றாக அடியேனது அனுபவத்தை எடுத்துரைப்பேன். மூன்று ஆண்டுகட்கு முன் அரசாங்கத்தொண்டு விஷயமாக எனக்கு இந் நகரைவிட்டகன்று கோட்டயமென்னும் பட்டணத்தில் சுமார் ஒன்றரை வருடம் வசிக்க நேர்ந்தது. அவ்வூர் பெரும்பாலும் மலையாளத்தவரால் குடிகொள்ளப்பட்டது. அங்கு தேன்மொழியாகிய தென்மொழியின் ஒலியைச் செவியுற்று இன்புறுவது அரிது. வெல்லம் அல்லது கருப்புக் கட்டி விற்கும் சிலர் மட்டுமே அவ்விடத்தில் தமிழ் பேசுபவராய்க்

காணப்பட்டனர். வீதியில் நான் உலாவும்பொழுது அவ் வணிகரின் கொச்சை வார்த்தைகளைக் கேட்டு மனமகிழ்ச்சி அடைவது என் வழக்கம். தற்பொழுது ஒரு விஷயம் என் ஞாபகத்தில் எழுகின்றது. என் ஆங்கிலப்போத காசிரியர் Prof. La Bouchardiere. M. A. சிங்களத் தீவான Ceylon-ல் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அங்கு எதிர்பாராத ஓர் சிறு நிகழ்ச்சி நேர்ந்தது. மலையாளத்தில் இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் நம் ஆசிரியரது செவியில் வீழ்ந்தன. தம் தாய் நாட்டுப் பாஷையின் மொழிகளைக்கேட்டமாத்திரத்தில் அவர் பேரானந்தக்கடலில் மூழ்கியதாய் கூறும்போதே ஆனந்தக் கண்ணீர் பொழிந்தனர். உடன் தானே அவ்விருவரையும் அழைத்து அளவளாவி வார்த்தை யாடுகையில், அவர் திருவிதாங்கோட்டார் என்றறிந்து களிபேருவகை யடைந்தனராம். இதினின்றும் அறியக் கிடப்பது யாதெனில், மொழிப் பற்றுடையார் சமயவேற்றுமை, வர்ண வேற்றுமை, நாட்டின் வேற்றுமை இவையொன்றையும் பாராட்டார் என்பதாம்.

தென்தமிழ் மாட்சியும் தொன்மையும்.

"அமிழ்தினுமினிய தீஞ்சுவையும் பழமையுமுடைய வற்றிற் கெல்லாம் பழமை யுடைத்தாய் எவ்வகை மொழிக்கும் பின்வாங்காதது தெய்வ மாட்சிச் செந்தமிழொன்றே". தமிழின் தொன்மை அறிதற்கரிது. இதைப்பற்றிப் பின்னர் மொழிவோம். 'தமிழ்' என்னும் மொழியின் பொருளே இனிமை அல்லது தித்திப்பு என்பர் புலவர். இதைப் பற்றி அபிப்பிராய வேற்றுமையில்லாமலுமில்லை. Hottentots, Bushmen, என்னும் நாகரிகமற்ற ஜாதியரும் தத்தம் தாய்மொழிகள் தங்களுக்கு இனிமை பயப்பவை

என்று கூறிக்கொள்ளுவார்கள். ‘காகத்திற்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு’ என்பது போலவும், பூமத்தியரேகையின் பக்கத்தில் உஷ்ணமேகலை அல்லது வெட்பமண்டலத்தில் வசிப்பவர்க்கும் ‘தன்னுடு பொன்னுடு’ என்பது போலவும் அன்று, தமிழின் இனிமை. அதைத் தாய்மொழியாகப் பெற்ருரனைவரும் அதன் இனிமையை ஒப்புக்கொள்கின்றனர். “தமிழ் மிகவலித்தலும் மிகமெலித்தலுமில்லாத இடைத்தரமான இன்பந்தரத்தக்க ஓசையுடையதாய்” நம்மவரது பேச்சு வழக்கில் உளதாய் நம்மவர்க்குரியமொழி. தமிழோசையின் இனிமையை நன்கு உணரவேண்டுமாயின் யாழ்ப்பாணத்தவர்கள் அம்மொழி பேசுவதைக் கேட்கவேண்டும். வார்த்தைகளை அவர்கள் சற்று நீட்டி உரையாடுதலால் இனிமை அளிக்கின்றது எனக்கூறுவேன். இசைஞானமில்லாத அடியேனுக்கு எக்காரணம் பற்றியோ அன்னாது மொழிகள் இன்பமளிக்கின்றன.

தமிழின் தொன்மை அறிதற்கரிது எனக்கூறினேம். தமிழ் நூல்களெல்லாவற்றினுந் தொன்மை பெற்று விளங்குந் தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். அதற்கு முதனூலாய் அகத்தியம் என்னும் இலக்கணம் விளங்குகிறது. எம்மொழிக்கும் இலக்கிய நூல்கள் பல உண்டான பின்னரே இலக்கணநூல் உண்டாவது வழக்கம். ‘தொல்காப்பியம்’ என்ற இலக்கண நூல் இற்றைக்கு ஏறக்குறைய 2000 ஆண்டுகட்கு முதற்பட்ட தலைச்சங்க காலத்தில் எழுதப்பட்டதென்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கண்ட முடிபாகும். அக்காலத்திற்கு எத்துணையோ ஆண்டுகளுக்கு முன்னராக இலக்கிய நூல்கள் தோன்றியிருத்தல் வேண்டும். தற்பொழுது நாகரிகத்தின் உச்சியில் அமர்ந்திருப்போரென்று உலகம் கொண்டாடும் மேல்நாட்டார், விலங்கினங்களைப் போன்று காடுகளி

னும் மலைகளிலும் திரிந்த நாட்களில் தமிழர்கள் கல்வி யறிவு ஒழுக்கங்களில் சிறந்து மிக உயரியநாகரிகநிலையில் நின் றனர். தமிழ் வழங்கும் நிலப்பரப்பெல்லாம் தமிழகம் எனப் படும். அத்தமிழகம் எக்காலத்தும் ஒருபடித்தாயிருந்ததில் லை. ஓர் காலத்தில் தமிழ்வேந்தர்களின் ஆட்சி, வடவேங்கடம் தென்குமரி என்னும் எல்லையுள் அடங்காது வடக்கே இமயம் வரையிற்சென்று நிலவியது. ஆராய்ச்சிக்குமுற்பட்ட பண் டைக் காலத்தில் இத்தமிழகம் தென்கடலிலே நெடுந்தூ ரம் பரவியிருந்தது. முதலூழிகாலத்தில்அங்கிலத்துப் பெரும் பரப்புத் தென் பகுதி கடலுள் மூழ்கியது. அதில் அழிவுற்ற மக்கள் தவிர, இருப்புற்றமக்கள் குடியிருப்புக் கிடந்தே டி, குமரிக்கு வடபாலுள்ள நாட்டில் குடியேறினர். தமிழ் நில மக்கள் சரித்திர காலத்தில் பாண்டியர், சோழர், சேரர், என முக்குடியினராயிருந்தனர். "சோழ நாட்டை ஆண்டு வந்த கரிகால வளவன் என்னும் ஆற்றல் படைத்த அரசன் வடதிசை நோக்கித் தன் சேனையோடு போந்து அங்குள்ள அரசரில் தன்னை எதிர்த்துப் போர் செய்வார் எவருமின்றி இமயமலை வரையும் சென்று, தன்னை அப்பால் செல்லவொட் டாது அப்பெரியமலை பகையாய் நின்று தடுத்ததென்று கண் டு, அதன்மீது வெகுளிகொண்டு தன் புலி முத்திரையை அம்மலையிற் பொறித்து மீண்டும் சிறப்புடன் தென்னாடு போந்தான்" என சிலப்பதிகாரத்தில் காணக்கிடக்கின்றது. தமிழ் நாட்டு வணிகர்கள் கடலேறி எட்டாத்தூரம் சென் று உரோமாபுரி (Rome), சீனம் (China) முதலிய நாடுக ளில் வர்த்தகம் செய்தனர். சிற்பம், சித்திரம் முதலிய தொழில்களும், படைக்கலம் இயற்றல் (Building men of war), மரக்கலம் பணித்தல் (Ship-building) ஆகிய தொழில்களும் அக்காலத்தில் மலிந்து சிறந்தன.

'The Tamilian Antiquary' (தமிழ்த்தொல்லியற் கலேஞன்) என்னும் உயர்தர ஆங்கிலப் பத்திரிகைப் புத்தகத்தில் தமிழர்களின் பண்டைய நாகரிகத்தைப்பற்றி விரிவாய் வரைந்திருக்கும் பற்பல வியாசங்கள் பிரசுரிக்கப் பெற்றிருக்கின்றன. உலகத்தில் மனிதன் தோன்றியதே தமிழகத்தில் என்று சொல்வாருமுளர். உலக மக்களது மொழிகளில் காலத்தையிட்டு முதன்மை பெற்றிருப்பது தமிழெனச் சொல்லப்படுகிறது. இது பொருளேப்பற்றி, இரண்டொரு ஆண்டுகட்குமுன் சித்தியடைந்த பரமஹம்ஸர் குஞ்ஞன் பிள்ளேச்சட்டம்பி சுவாமி என்னும் கல்விக்களஞ்சியமான நாயர் குலச் சிரேட்டர் "உலகத்திய மொழிகளில் மிகத் தொன்மை வாய்ந்தது தமிழே" என்று நாட்ட பலபலசான்றுகள் சேகரித்து வந்தார். அன்னர் வடமொழியிலும் தென்மொழியிலும் பெரும் புலவர். பல் கலேக் கழகக் கலேவாணர்கள் பலர் அன்னாரது ஒப்புயர்வற்ற புத்தி நுட்பத்தைத் தெரிந்து திகிலடைந்திருக்கின்றனர். அவர் ஓர் துறவியானதால் புகழை விரும்பாமல் பாடுபட்டு வந்தவர். அன்னரை ஓர் ஞான சமுத்திரம் அல்லது அறிவாழி என்று கூறுவது மிகையாகாது. உலகத்திலுள்ள பற்பல மொழிகளின் நெடுங்கணக்கின் ஒவ்வொரு எழுத்தின் வடிவமானது தமிழ் நெடுங்கணக்கிலிருந்துவந்ததென்று அங்கை நெல்லிக்கனிபோல் அன்னர் அடியேற்கு எடுத்துக்காட்டியுள்ளார். இது விஷயமாய் அவ்வடிகள் நடாத்திய ஆராய்ச்சிகளில் சிலவற்றை, நாங்கள் சந்தித்துச் சம்பாஷணே நடத்துங்காலங்களில் அவ்வடிகள் மிக விரிவாக எனக்குப் புகட்டிப்போந்தனர். அவர் அநேகம் குறிப்புகள் தமிழிலேயே எழுதி வைத்திருந்தனர். முத்தி பெறுமுன்னே அவைகளே யெல்லாம் சேர்த்து ஓர் நூலாக அச்சியற்ற வேண்டுமென்ற ஆவல் அன்னருக்கும் அடியேற்குமிருந்தது. ஆனல் அது

நிறைவேற இடமாகாமற்போனது தமிழ் மக்களின் தவக் குறைவேயாம்.

தமிழ்மொழி தனி மொழியே.

தமிழ் என்ற சொல்லே, தான் தனி மொழி என்றும், தன் சிறப்புக்கோர் அறிகுறியாகத் தன்னுடைய சிறப் பெழுத்தொன்று சேர்த்துள்ளதென்றும், தொன்று தொட்டு வழங்கும் மொழியென்றும் கூறுவர் அறிஞர். தமிழ் தனிமொழியெனவே தனித்து நிற்கும் மொழியென்றும், எப்பாஷையினுடனும் சேர்க்கப்படுவது முடியாது என்றும் பொருள் படும். எண்ணிறந்த தமிழ் நூல்கள் தமிழ் மொழியிலிருக்கின்றன. தொல் காப்பியம், அகத்தியம் என்னும் இலக்கணங்கள் எழுதப்படுவதற்கு முன்னரே பல இலக்கிய நூல்கள் தமிழ் மொழியில் இருந்திருக்கவேண்டுமென விளக்கப்பட்டது. அவற்றில் ஒன்றும் இக்காலத்தில் இல்லாமையால் அந்நூல்களெல்லாம் இடைக்காலத்தில் அழிந்திருக்கவேண்டும். "இவ்வாறு தனது இனிய அணிகளையெல்லாம் இழந்தும் இனிமையும் இளமையும் குன்றாது நின்ற தமிழ்த்தாய்க்கு பிற்காலத்திய தமிழ்ப்புலவர்கள் சில நல் அணிகளை அணிந்து மகிழ்ந்தார்கள். சூளாமணியே முடியணியாகவும் சிந்தாமணியே சிரிய மணியாரமாகவும், மணிமேகலையே இடையணியாகவும், சிலப்பதிகாரமே செய்ய தாள் அணியாகவும் கொண்டு தமிழ் மாது திகழ்ந்தாள்." முச்சங்கங்களின் காலங்களிலும் பின்னரும்அரசால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ப்புலவர்கள் சிறந்த நூல்கள் செய்யத் தலைப்பட்டார்கள். வான்மீக முனிவரது இராமாயண வடமொழிக் காப்பியத்தைக் கவி நயங்கனிந்தொழுகுமாறு தமிழ் மொழியில் இயற்றித் தந்தனர் கம்பர் பெருமான். குமணன் என்னும் அரசன் தனது நாடு, நகரங்களையெல்லாம் இழந்தும் காட்டில் அவனிடம் பரிசு பெறச்

சென்ற தமிழ்ப் பாவலரை நோக்கி,

"அந்த நாள் வந்திலே அருங்கவிப் புலவோய்
இந்த நாள் வந்துநீ நொந்தனை யடைந்தாய்
தலை தனைக் கொடு போய்த் தம்பிகைக் கொடுத்து
விலை தனைக் கொண்டுன் வறுமை நோய் களையே"

என்று தன் தலையையும் கொடுத்துத் தமிழ்ப் புலவரது வறுமையை நீக்க முயன்றான் என்றால் அவனது தமிழ்ப் பற்றை அளவிட்டுரைத்தலாகுமோ? இத்தகைய அரசர்கள் முற்காலத்தில் தமிழ் மொழியைப் பாதுகாத்தமையாலேயே அம்மொழி தழைத்தோங்குவதாயிற்று.

இலக்கிய, இலக்கண, சமய நூல்களும் நீதி நூல்களும் தோன்றி விளங்கின. அரிய பெரிய தொல் காப்பியம், பஞ்ச காவியங்கள், புறநானூறு, திருக்குறள், தேவாரம், திருவாசகம், கம்பநாட்டாழ்வார் இராமாயணம், மனோன்மணீயம் முதலிய ஆன்றோர் நூல்களை நம் பூர்வீகச் சொத்தாய்ப் பெற்ற செந்தமிழ்ச் செல்வர்காள்! " நாம் அன்னாரது வழித்தோன்றலோ" எனும் ஐயம் நிகழ்கின்றதல்லவா? தமிழனாகப் பிறக்கத்தவமன்றோ செய்தல் வேண்டும். இனிய தமிழைத் தாய் மொழியாய்ப் பெறும் பேறுபெற்ற பெரியோய்! ஆங்கிலம் முதலிய பிறமொழிகளை மட்டும் படிக்கவும் தமிழ் மொழியைத்தள்ளவும் தலைப்படாதீர்கள்.

என் மாணவச் சகோதரர்களே! இதுகாறும் தமிழின் பெருமையைக் குறித்துப் பேசினேனேயொழிய என் அன்பின்மிக்க உங்களைப்பற்றி யாதொன்றும் கூறவில்லையே. உங்களது கல்விச் சாலை ஆசிரியர்கள் உங்களுக்கு அளிக்கக் கூடிய உபதேசங்களைவிட அதிகமாக யாதொன்றும் அளிக்க நான் வல்லேனல்லேன். வாலிபப் பருவத்தைக் கடந்திருக்கும்

என்போலியர்களுக்கு நீங்களே தாரகம். எங்களாலியற்ற வியலாத காரியங்களையெல்லாம் எங்கள் பிற்காலத்தவர்களாகிய நீங்களே செய்து முடிப்பீர்களென்று நாங்கள் நம்புகிறோம். பழைய தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் கற்று ஆராய்ச்சி நடாத்தி, தென்னாட்டின் உண்மைச் சரித்திரம் எழுதுவீர்களாக! இப்பெரும் பாரம் உங்கள் மீது நாங்கள் சுமத்துகிறோம்.

திருவிதாங்கோட்டுப் பள்ளித் தமிழ்ச் சிறுர்களாகிய உங்களுக்குப் பாஷாவிஷயமாக ஏனைய நாட்டு மாணாக்கர்களை விடப் பெரிதான ஓர் செய்கடனிருக்கின்றது. அஃதாவது, வஞ்சிநாட்டு அரசாங்கமொழி மலையாளம்; அவ்வரசாங்கத்துக்கு மேலரசாங்கமொழி ஆங்கிலம்; இவ்விரண்டு மொழிகளும் கற்றுக்கொள்ளவேண்டியது உங்களுக்கு இன்றியமையாதது. தாய் மொழியாகிய தமிழ் மொழியை எவ்வாற்றானும் கடைத்தேறுதல்வேண்டும். இவ்விரண்டு நாட்டு மொழிகளில் ஒன்றைச் செவ்வனே பயின்றவர்க்கு மற்றதை எளிதில் பயில முடியும். மலையாளப் படிப்பும் தமிழ்ப் படிப்புக்கு உதவி புரியும். தமிழ் மட்டும் கற்றவர்களில் ஓர் சிலர் 'ழ' என்னும் தனித் தமிழ் எழுத்தை 'ள' என்று உச்சரிப்பது காணலாம். மலையாளம் கற்றவர்கள் ஒரு போதும் இவ்விதம் கொச்சை மொழி கூறுர். ஷ, ஸ முதலிய எழுத்துக்களையும் 'ர' 'ற' வின் வேற்றுமையையும் அவர்கள் நன்குணர்வார்கள். கொஞ்சமாவது வடமொழி கற்றுக்கொள்வது பேருதவியாயிருக்கும். உலக வழக்கில்லாது இறந்துபட்ட வடமொழியாகிய சம்ஸ்கிருதத்தைக் கற்பதனுல் அடையும் பயன் என்னை? என்று இகழ்ந்துரையாதீர்கள். அதைப் படிப்பதால் ஆரியர்களின் உண்மைச் சரித்திரம் நன்கு விளங்கும். வடமொழிப் பயிற்சி தனித் தமிழ்ப் பாஷ

காப்புக்கு உதவி புரியுமேயன்றித் தீங்கிழைக்காது. ஸம்ஸ்கிருத ஞானமில்லாததனுலேயே அம்மொழிச் சொற்களை ஏராளமாகச் சிலர் தமிழில் கலக்கின்றனர். தமிழ்மொழிப்பற்றுக்கு வடமொழி வெறுப்பு வேண்டியதில்லை. பிறமொழிகள் தமிழில் கலத்தல் கூடாது என்பது எனது கொள்கையல்ல' ஆனுல் தூய தனித்தமிழ்ச் சொற்களாலமைக்கப்பட்ட ஓர் கட்டுரை அளவற்ற ஆனந்தத்தை எனக்களிக்கின்றது. தமிழில் ஏராளமான சொற்கள் உண்டன்றோ. அவைகளை ஒழித்து வடசொற்களையோ, ஏனைய மொழிச் சொற்களையோ அதில் கலப்பதால் அது தன் இனிமையும் பெருமையும் இழக்கின்றது. நம் தாய் மொழியைப் பாதுகாத்தாலொழிய நாம் எவ்வாறும் மேலோங்குதல் இயலாது.

கடைசியாக உங்களை நான் ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன். நமது தமிழ்த் தாயை ஒரு காலத்திலும் அவமதித்தலாகாது. மற்று ஆசிரியரை நீங்கள் எவ்வாறு மதிப்பீர்களோ அவ்வாறே உங்கள் தமிழாசிரியரையும் மதித்தல் வேண்டும். இது காறும் அவ்வாறே நடந்திருப்பீர்களென நம்புகிறேன். மாணவர்களாகிய உங்களுக்குத் தமிழைப்பன் முறையில் ஆதரிக்கலாம். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களது தமிழ்ப் பாடபுத்தகங்களைத் தவிர நற்றமிழ் நூல்களைப் படித்தல்வேண்டும். தற்காலத்தில் செவ்வனே நடத்தப்படும் தமிழ் மாதப் பத்திரிகைகள் எத்துணையோ இருக்கின்றன ஆண்டுக்கு ஒரு ரூபாய் மட்டும் சந்தாத் தொகையுடைய மாதச் சஞ்சிகைகள் பல வெளியாகின்றன. திருவிதாங் கோட்டிலேயே (1) அன்பானந்தன், (2) நல்லார்க்கு நண்பன், என்னும் மாதப் பத்திரிகைகள் நாகர் கோவிலிலிருந்து வெளி வருகின்றன. சென்னையில் (1) ஆனந்தபோதினி, (2) ஒற்றுமை, என்னும் பத்திரிகைப் புத்தகங்

களுமுள. அங்கிருந்தே (1) செந்தமிழ்ச் செல்வி, (2) செந்தமிழ்ச் சிந்தாமணி, (3) பஞ்சாமிர்தம், என்பனவையும், திருச்சிறுப்பள்ளியிலிருந்து (1) தமிழர், (2) தமிழ்ப் பொழில் என்னும் மாதாந்தப் பத்திரிகைப்புத்தகங்களும் வெளியாகின்றன.

தனித் தமிழ் நூல்கள் படிக்க ஆர்வமுடையார், (1) திருநெல்வேலி சேதுப்பிள்ளை, B. A., B. L., அவர்கள், (2) பல்லாவரம் சுவாமி வேதாசலம், (3) நாகை நீலாம்பிகை அம்மாள் அவர்கள், (4) ஏ. மாதவையா பி. ஏ. அவர்கள், (5) கலியாண சுந்தர முதலியாரவர்கள், (6) வி. ஜி. சூரிய நாராயண சாஸ்திரியாரவர்கள், (7) முன்னீர்ப் பாளயம் ஈசுவர மூர்த்திப்பிள்ளையவர்கள், (8) ஸச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T., அவர்கள் முதலியோரின் உரை நடை நூல்களைப் படித்தல் நலமாகும். தமிழர் நாகரிகத்தைப் பற்றி அறிய விரும்புவோர் ஆங்கில நூல்களான (1) 'Tamils: 1800 years ago' by Kanaka Sabhai Pillai, B. A., B. L, (2) Tamil Studies by Srinivasa Iyengar, M. A., (3) Dravidian India by Sesha Iyengar M. A,, என்பவைகளைப் படிக்கலாம்.

கடைசியாக நீங்களனைவரும் வல்லுடம்பினராய் உங்கள் தமிழ்ச் சங்கத்துடன் நீடு வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றுமாறு இறைவனை வாழ்த்துகின்றேன்.

(Reprinted from *Our Little Paper* for November 1925, published by the authorities of the St. Joseph's High School, Trivandrum.

Tamil and Malayalam.*

தமிழும் மலையாளமையும்.

"பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்பக்க
நின்று கேட்டாலும் பரிந்து உள் உணர்ந்தாலும்,
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத்தாலும்இத்தனைக்
குந்தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே,
வேர்த்து ஆவிமயங்காது கனிந்த நறுங் கனியே, மெய்மை
அறிவானந்தம் விளங்கும் அருள் அமுதே,
தீர்த்தா என்று அன்பரெலாந் தொழப் பொதுவில் நடிக்கும்
தெய்வநடத்தரசே, என்சிறுமொழி ஏற்றருளே."

கனம் அவைத்தலைவீர், என் அன்பார்ந்த மாணவ நண்பர்
காள், செந்தமிழ்ச் செல்வர்காள்,

இன்றிரவு யான் பேச எடுத்துக்கொண்ட பொருள் "தமிழும் மலையாளமையும்," என்பது அழைப்புக் கடிதத்தின்

---

* திருவனந்தபுரத்திற்கடுத்த செய்யாற்றின்கரையில் ஆங்கில உயர்தரக்கல்விச்சாலையைச்சேர்ந்த இளைஞர் இலக்கியக்கழகத்தின் (Juvenile Literary Association) எட்டாவதாண்டுக்கூட்டத்தில், மாட்சிமிக்க திருவிதாங்கூர் மஹாராஜா திருவுள்ளத்தின் ஆசிரியர் மிஸ்டர் டாட்வெல் (Mr. D. W. Dodwell M. A., I. C. S.) அவர்களது தலைமையின் கீழ் 1926 ஆம் ஆண்டு டிஸெம்பர் மீ 17-உ வாசிக்கப்பெற்ற கட்டுரை.

வாயிலாய் உங்களுக்குத்தெரியவந்திருக்கும். இருதிறப்பட்ட நோக்குடன் இப்பொருள் பற்றிக்கூறலாகும்.

(1) இவ்விருமொழிகளிலுமுள்ள இலக்கிய நூல்கள், அற நூல்கள், சமய நூல்கள் முதலியவைகளின் மாட்சிமையையும் பெருமையையும் எடுத்துக்காட்டி அந்நூல்கள் எவ்வாறு ஒப்புடையவையென்றும் அல்லது ஒருமொழியிலுள்ள நூல்கள் ஏனைய மொழியிலுள்ள நூல்களைவிட எவ்வாற்றானும் உயர்வு உடையனவாமென்றும் ஆராய்ந்து நோக்கலாம். (2) இவ்விருமொழிகள் தம்முள் யாதேனும் தொந்தமோ தொடர்போ உண்டாமெனச்சிந்தித்து, மொழிநூல் (Philology) வழி ஆராய்ச்சி நடாத்தி, அவைகளின் பழமை அல்லது தொன்மை முதலியவற்றைக்குறித்து ஆராயலாம். ஆனால் யானாகவே எனக்குத் தீர்மானித்துள்ள இருபது நிமிஷப்பொழுதிற்குள் இப்பொருள் பற்றி விரித்துரைக்க என்னாலாகாது. ஆகவே, சில குறிப்புக்கள் மட்டுமே இக்கட்டுரையில் தரத்துணிவேன்.

தேன்மொழியாகிய தென்மொழியின் தொன்மையும் மாட்சியும், அருமையும் பெருமையும், சீரும் சிறப்பும் ஐயமின்றி அறிஞர்களால் கொள்ளப்படுகின்றன. அவ்வன்னை மொழியின் மாண்பு, இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவிலிருந்து எடுத்துள்ள அடியிற்கண்ட கடவுள் வாழ்த்தால் நன்கு விளக்கப்படுகிறது:—“தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே, தனித்தநறுந்தேன்பெய்து பசும் பாலும் தேங்கின் றனிப்பாலும் சேர்த்தொரு தீம் பருப்பிடியும் விரவி, இனித்தநறுநெய்யளேந்தே இளஞ்சூட்டினிறக்கியெடுத்த சுவைக்கட்டியினுமினித்திடும் தெள்ளமுதே” என்றுஎல்லாம் வல்ல இறைவனை விளித்துக்கூறியதும் உயர்தனிச் செம்மொழி

யாகிய தமிழ்த்தாய்க்கும் ஒவ்வா நிற்கின்றது. 'தமிழ்' என்னும் சொல், 'தமி' என்னும் மூலச்சொல்லில் நின்றும் பிறந்து, ஒப்புயர்வற்றமொழியெனப் பொருள்படுகிறது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' என்றனர் தொல்காப்பியர். 'தமிழ்' என்பது 'இனிமை' யெனப்பொருள் கொள்வாருமுளர். தமிழைத்தாய்மொழியாகப்பெறும் பேறு பெற்றோர்க்கு அஃது 'அமிழ்தினுமினியதே'. ஆனால் அஃது இந்நாளில் ஓர் சிலர்க்கு எட்டிக்காயினும் கொடிய கைப்புடைத்தாயிருக்கின்றது. இதுவும் கலிகாலக் கொடுமையன்றோ! இது நிற்க.

நம்தாய் மொழியாகிய தமிழ் சேர, சோழ, பாண்டியர், என்னும் தென்னாட்டுமூவேந்தர்களின் மொழியே. இச்செந்தமிழ்வேந்தர்மூவருள்ளே, சேரமாபு ஏனையவற்றினும் பழமையுடைய வானவர் (Celestial) வம்சம் என்ற பெயரால் அறியப்படுகின்றது. பாண்டியன் என்னும் சொல்லின் பொருள் பண்டை நாள்தொட்டேயுள்ளவன் என்பதாம். சேர, சோழ, பாண்டியர் என்னும் சொற்றொடரில்சேரர் முற்படக்கூறப்பட்டுவருகிறது என்னும் உண்மை உணரற்பாலது. இம்முறைவைப்பு பண்டைநாள் தொட்டேயுள்ள பாண்டியமரபுக்கும்பண்டையர், சேரலர், எனவிளக்காநிற்கின்றது. சேரமாபினரெல்லாரும் அறிவு திருவாற்றல்களால் தங்காலத்தே ஒப்புயர்வின்றிவிளங்கியவர். செந்தமிழ்வளர்ச்சியுறச் செய்ததில் இன்னாரே அக்காலத்துச்சிறந்து நின்றவர். தமிழை உயர்தனிச்செம்மொழியென்னும் பெயருக்கு உரித்தாக்கும் பஞ்சமகாகாப்பியங்களுள்முதன்மை பெற்றிருக்கும் சிலப்பதிகாரம் என்றதொன்னூல் சேரவம்ச இளவரசாகிய இளங்கோ அடிகள் என்னும் துறவியால் இயற்றப்பெற்றது. இப்பெருங்காப்பியத்தின் அருமை பெருமைகளை எடுத்து

உரைக்கின் மிகவிரியும். இவ்வரசத்துறவியின் தமையன் "தென்னாட்டு அசோகன்" என்னும் புனைப்பெயர் பூண்ட புகழ்பெற்ற செங்குட்டுவனாவான்.

சோழவேந்தர்களின் வம்சமும் பாண்டிய அரசர்களின் வம்சமும் இறந்துபட்டன. அவ்வரசர்களின் வழித்தோன்றல்களேனும் நாவலந்தீவைச்சேர்ந்த பாதகண்டத்துளில்லை. ஆனால் தென்னாட்டுமூவேந்தருள் முதன்மைபெற்ற சேரவம்சத்தரசர்களின் பரம்பரையோர் இன்றும் அரசுபுரிந்து வருகின்றனர். "சேரன்—செங்குட்டுவன்" என்னும் ஆராய்ச்சி நூலில், ஸ்ரீமான் இராகவய்யங்கார் அடியிற்கண்டவாறு கூறுகின்றனர்:—

"சேரவரசர், தம் பண்டைத் தலை நகரான வஞ்சிமாநகரை நெகிழவிட்டு, இயற்கையரண்பெற்ற மலைநாட்டுள்ள கொடுங்கோளூரை (கொடுங்கல்லூர் = Cranganore) தங்கள் தலை நகராகக்கொள்ளலாயினர். அவ்விராஜதானியில் இருந்து மலை நாடாண்ட சேரமான்கள் பலராவர். இவருள்ளே, திருமாலடியாராகிய குலசேகர ஆழ்வாரையும் சேரமான் பெருமாள் நாயனாரையும் நம்மவரெல்லாரும் நன்கறிவர். இத்தகைய தனித்தமிழ் வேந்தர்களது ஆட்சியிடமாய்ச்செந்தமிழ்ப்பயிர் செழித்து வளர்ந்த அம்மலை நாடானது பிற்காலத்தில் மாறிய நிலையை என்னென்பேம்! அச்சேரநாடு சில நூற்றாண்டுக்குள் பாஷைபாலும் நடையுடைபாவனைகளாலும்வேறுபட்ட ஒருதனித்தேசம் போல் இப்போது நிற்பது அதிசயமேயன்றோ? இவ்வாறாயினும், பழைய சேரவரசர்கிளைகள்மட்டும்இன்றும் அந்நாடாட்சிசெய்து வருகின்றன. சோழ பாண்டிய வமிசங்கள் மறைந்து போய்ப் பலநூற்றாண்டுகளாயினும், சேரமரபினர் சிலர் திருவனந்தபுரம், திருச்சூர்களைத் தலை நகர்களாகக் கொண்டு அரசியல்புரிந்துவருவது தென்னாடு செய்தபாக்கியமே என்னலாம். இவர்களுள், திருவிதாங்

கோட்டு அரசர் வஞ்சிபாலர் என்ற பட்டப்பெயரால் இன்றும் வழங்கப்பெற்றுவருதல் இங்கே குறிப்பிடத்தக்கது. இதனால், இவ்வேந்தர் வஞ்சிமாநகரையே தம் பூர்வ ராஜஸ்தலமாகக்கொண்டிருந்தவர் என்பது, நன்குவிளங்கும். இவ்வமிசத்தரசரும், இவரால் ஆளப்படும் குடிகளும் பாஷை நடை உடை பாவனைகளால் வேற்று நாட்டார்போல இக்காலத்தில் மாறி நின்றனராயினும், பழைய தமிழ் வழக்கவொழுக்கங்களையும், சொற்பொருண்மரபுகளையும் அவரிடத்துப் போலச்செந்தமிழ்நாட்டு மக்களுள்ளும் நாம் காணமுடியாவென்றே சொல்லலாம்.'' இவ்வாறு கூறி முடித்தனர் ஐயங்காரவர்கள்.

அமிழ்தினுமினிய நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி மாட்டு, வஞ்சிபாலர்களான நம் திருவிதாங்கோட்டு அரசர்கள் பேரபிமான முடையராகவே இருந்து வந்திருக்கிறார்கள். தமிழையும் மலையாளத்தையும் தம் தாய்மொழிகளாகவே நம் நாட்டு மன்னர்கள் மதித்துவந்தனர். வஞ்சிநாட்டரசர்பால் தமிழ்ப்பாவலர்கள் பலப்பல பரிசுபெற்று வந்திருக்கின்றனர். திருவிதாங்கோட்டு முடிசூழ்ந்த மன்னர்களில் சிலரும் ஓர்சில இள அரசுக்களும் தமிழில் சில கீர்த்தனங்கள் செய்துள்ளார்கள். போரைப்பற்றிக்கூறும் 'புறப்பொருள் வெண்பாமாலை' என்னும் செய்யுள்நூலை சேர அரசகுடும்பத்தினரான ஓர் புலவர் பெருமான் இயற்றியிருக்கிறார். ஒன்பதாவது நூற்றாண்டின் முதற்பாதியில் ஆட்சிபுரிந்த சேரமான் நாயனார் 'ஞான உலா', 'பொன்வண்ணத்தந்தாதி' முதலிய நூல்கள் வரைந்திருக்கிறார். திருவனந்தபுரம் அரண்மனையிலுள்ள 'கிரந்தப்புரை' என்னும் நூல் நிலையத்தில் கம்பராமாயணம் முதலிய பழைய நூல்கள் ஏட்டுப்பிரதியாக் காணப்படுகின்றன. அரண்மனையில் சாதாரணமாக இன்றைக்கும் வழங்கும் சொற்கள் நம் அரசர்கள் தமிழர்களே என்

னும் உண்மையை விளக்குகின்றன. உதாரணமாக (1) கருவேலம் (2) தேவாரப்புரை (3) நீர்க்காப்பு (4) பள்ளியறை (5) பள்ளிவாயனை (6) பள்ளிஉறக்கம் (7) தமபுரான் (8) தம்புராட்டி (9) மூத்ததம்புரான் (10) இளையதம்புரான் (11) திருமேனி (12) திருநாள் (13) எழுந்நவ்ளத்து (14) திருமுடிக்கலசம் (15) கோயித்தம்புரான் (16) அடியேன் (17) அடிக்கலம் (18) விடை கொள்ளல் (19) தவணைக்காரன் (20) மூத்தபிள்ளை (21) பட்டைக்காரன் (22) அண்ணாவி முதலிய சொற்களை நோக்குக.

மலையாளத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். மலைநாடாகிய மலையாளம் என்பது Western Ghauts என்னும் மேற்கு மலைத்தொடரின் மேற்குள்ள நிலப்பரப்பிற்குத் தமிழர்கள் அளித்த பெயரேயாம். மலையாளம் என்பதற்குப் பொருள் மலையை ஆளுபவர்களின் நாடு என்பதே. இத்தேயத்தையே சேரநாடென்றும் அழைப்பார்கள். அந்நாட்டின் மொழிக்கும் மலையாளம் என்று பெயர். மலையாளமை என்பது பழைய மளையாளமொழி. தமிழுக்கும் இந்தப்பழைய மலையாளமொழிக்கும் தம்முள் என்ன வேற்றுமை? தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளமை என்னும் கிளைமொழிகள் உண்டாகுமுன், தமிழகம், அஃதாவது, தமிழ்நாடு என்பதின் எல்லைகள் வடக்குகங்கையாறு, தெற்கு குமரிமுனை, கிழக்கும் மேற்கும் கடல் என்பனவாம். பின்னர் தமிழகத்தின் பரப்பு, வடக்கு வேங்கடமலை அல்லது திருப்பதி முதல் தெற்கு கன்னியாகுமரிவரையிலும் கிழக்கிலும் மேற்கிலும் வங்காளக்குடாக்கடலுக்கும் அரபிக்கடலுக்கும் உள்ளில்கிடந்தது. தற்பொழுதைய திருவிதாங்கோடும், கொச்சியும் பிரிட்டீஷ் மலையாளமும் அதில் உட்பட்டிருந்தன. மேலக்கடற்கரையிலிருந்த தமிழர்கள் தமிழ்மொழியைப் பாதுகாவாது, தமிழில் வடமொழிச்சொற்களை ஏராளமாகக் கலக்க இடம்

தன்தமையினுலேயே, இப்பொழுது தமிழே 'மலையாளம்' என்ற பெயரோடு வேறு மொழியாய் வழங்குகின்றது. தொன்மை மிகுதியாலும் பயிற்சி மிகுதியாலும், பல்லாண்டுகட்கு முன்னேயே தமிழ் இரண்டு பாகுபாடு உடையதாயிற்று: (i) செம்மையான வரை மொழி அல்லது செந்தமிழ் (ii) வாய்மொழியாகிய கொடுந்தமிழ். இக்கொடுந்தமிழே மலையாளமை யென்பது.

யாதேன் இரண்டு மொழிகள் தம்முளுள்ள தொடர்பை நிர்ணயிப்பதற்குச் சிற்சில ஆதாரங்கள் வேண்டும். (1) அவைகளின் பொது அமைப்பினுடையவும் இலக்கணத்தினுடையவும் ஒப்பனை. (2) ஒப்பிட்டு நோக்கப்படும் மொழிகளின் ஓசைகள் ஒழுங்காகவும் ஒரே தன்மையனவாகவும் மாறி மாறி வருதல். இவையில்முந்திய இரண்டும் இலக்கணத்தையும், ஏனையவை ஓர் மொழியின் சொற்களையும் சார்ந்திருக்கின்றன. "பாஷையின் நிகண்டுகள் கலப்புற்றிருப்பினும், அவையின் இலக்கணம் கலப்புற்றிராது. ஆங்கில நிகண்டில்,கெல்டிக்(Keltic), நார்மன்(Norman), க்ரீக்(Greek), லத்தீன் (Latin) என்னும் மொழிகளினின்றுள்ள சொற்களைக்காண்கலாம்; ஆனுல் ஆங்கில பாஷையின் அமைப்பில் வேற்று இரத்தத்தின் ஓர் துளி கூடக்காணமுடியாது. ஜெர்மன் மகாசமுத்திரக்(German Ocean) கரைகளில் ஆங்கில மொழி, ஆங்கில்ஸ் (Angles), ஸாக்ஸன்ஸ் (Saxons), ஜூட்ஸ் (Juits) என்பவர்களால் வழங்கப்பட்ட காலத்தில் ஆங்கிலத்தின் இரத்தமும் உயிருமான இலக்கணம் எவ்வாறிருந்ததோ அவ்வாறே, இன்றும் பிரிட்டீஷ் தீவுகளில் பேசப்படும் ஆங்கிலமொழியின் இலக்கணம் பரிசுத்தமாயும் கலப்பற்றுமிருக்கிறது," எனக்கூறுகிருர் மாக்ஸ்மூலர் (Max Muller) என்னும் பெயர் பெற்ற மொழி நூலாசிரியர். ஒவ்வொரு மொழியையும் சோதித்துப் பார்த்தால் இவ்வுண்மை மீண்டும் மீண்டும் புலப்படும்.

மலையாளம் தமிழினின்று பிறந்தது என்னும் உண்மைக்குப் போதிய சான்று அதன் இலக்கணமேயாம். மலையாளத்தில் வேற்றுமைகளின் வெவ்வேறான பொருள்கள், சில வேளைகளில் மூலச்சொற்களினின்றும் வேறாய் நிற்கும் அவைக்கொப்பான வேற்றுமை முடிபுகளைச்சேர்ப்பதினாலும் உண்டாகின்றன. வினைச்சொற்களுக்குமுன் நிற்கும் எழுவாய்க்குப்பின்னாகவே உரிச்சொற்கள் வரும். கலப்புப் பெயர்ச்சொற்களில், முந்திய சொற்கள் பிந்தியவைகளை எப்பொழுதும் வரையறுத்துக்காட்டுகின்றன. மலையாளத்தில் ஒருமை, பன்மை என்னும் இருவகையுண்டே ஒழிய, இரட்டை அல்லது இரண்டுகொண்ட எண் (Dual Number) கிடையாது. 'நான்' என்னும் தன்மைப்பிரதிப் பெயரின் பன்மைக்கு 'நம்மள்' என்றும் 'ஞங்ஙள்' என்றும் இரண்டுருவங்கள் உண்டு. 'நம்மள்' என்பது முன்னிலையைத்தழுவியும், இரண்டாவதான 'ஞங்ஙள்' முன்னிலையைத்தழுவாமலுமிருக்கின்றன. சிலபொழுது வினைச்சொற்களுக்குப் பால்வேற்றுமையுமிருக்கிறது; உதாரணமாக, சொல்லினாள், சொல்லினான், சொல்லினார் என்னும் சொற்களைக் கவனிக்க. முற்கூறிய இவ்விஷயங்கள் தமிழுக்கும் மலையாளத்துக்கும் பொதுப்படையாயுள்ளவை. இவையாதொன்றும்வடமொழிக்குப்பொருந்தாது.

ஓர் வாக்கியத்தின் முக்கியமான சொல் காலங்களைக்குறிக்கும் வினைச்சொல்லேயாம். ஓர் தமிழ்வினைஉருவத்தின் உதவியின்றி யாதொரு வாக்கியமும் மலையாளத்தில் வரையவோ கூறவோ இயலாது. வடமொழி மூலச் சொற்களைச்சேர்த்து எத்தகைய சொற்களைப்படைத்தாலும், மலையாளத்தில் ஓர் வினைச்சொல்லின்பொருள் உண்டாகவேண்டுமாயின், ஓர்தமிழ்ச் சொல்லையோ அல்லது வினை உருவத்தையோ கலப்பது இன்றியமையாதது, வீக்ஷணம், க (ग) மனம்,

ஸம்பா(ஷ)ஷணம் என்னும் வடமொழிச்சொற்களை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இவையினின்று மலேயாளவினைச்சொற்களை உண்டு பண்ண, தமிழிலுள்ள ஈற்றசை மொழியாகிய 'ந்நு' (ன்று) 'து' (று) அல்லது 'சு', 'உம்' என்பவைகளைச்சேர்க்கவேண்டும். உதாரணம்: வீக்ஷிக்குந்நு, வீக்ஷிச்சு, வீக்ஷிக்கும்; க (஗) மிக்குந்நு, க (஗) மிச்சு, க (஗) மிக்கும்; ஸம்பாஷிக்குந்நு, ஸம்பாஷிச்சு, ஸம்பாஷிக்கும். தமிழிலுள்ள இவ் ஈற்றசைச்சொற்கள் அல்லது கடையடைமொழிகள் உண்மையில் தமிழில் வினையைக் குறிக்கும் சொற்களின் சுருங்கிய உருவங்களேயாம். மலேயாளத்திலுள்ள வினை—உருவங்கள் அம்மொழி தமிழினின்றும் வந்ததென்பதைத் தெளிவுற விளக்குகின்றன.

தனி அல்லது 'பச்சை' மலேயாளச் சொற்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். தினந்தோறும் வழங்கும் சொற்களும் உடம்பின் உறுப்புக்களின் பேயர்களும் இளமை முதல் நெருங்கிய பழக்கமுள்ள பொருள்களின் பெயர்களும் தனித்தமிழ்ச் சொற்களாகவேயிருக்கின்றன. உதாரணம்: நெல்லு, அரி (அரிசி), உலக்க, விடு, மாடு, நாய், குதிர, காள முதலியவை; சாதாரணமான வினைகளைக்குறிக்கும் காணுக, ஓடுக, சாடுக, பாடுக முதலியவை; குடும்பத்திலுள்ள உறவினர்களைக்குறிக்கும் அம்மா, அச்சன், உடப்பிறந்நவன், உடப்பிறந்நவள், மகன், மகள் முதலியவை; மன எழுச்சிகளைக்குறிக்கும் பேடி, அன்பு, கூறு, குழப்பம், பக இவையெல்லாம் தமிழ்ச் சொற்களே. செறுமன்—சிறுவன், வாதில்—வாயில்; படிஞ்ஞாறு—படிஞ்ஞாயிறு; கணு—கிணவு; கடா—கிடாவு; ப்லாவு—பலா; முதலியசொற்களையும் உற்றுநோக்குக. தவிர, ஆயிரம் ஆண்டுகட்கு முன், எழுத்தச்சன் மலேயாளத்

தில் கிரந்த லிபிகளை வழங்கினதற்கு முன், கேரளத்தில் தமிழ் வட்டெழுத்தே வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாராய்ச்சியின் ஈறாக யான் கூறிக்கொள்வது யாதெனில் மலையாளமொழியானது வடமொழிச்சொற்கள் கலக்கப்பெற்ற கொடுந்தமிழென்பதே. அதை தமிழின் பழையதும் பெரும்மாற்றங்கள்பெற்றதுமான ஓர் கிளைமொழியென்று சொல்லலாம். இக்கொள்கை என் தாய்மொழியான தமிழின்பாலுள்ள பற்றினால் யான் கூறியதல்ல. தமிழ், மலையாளம் என்னும் இவ்விருமொழிகளையும் என் தாய்மொழிகளாகவே யான் கருதியுள்ளேன். ஒருமொழி பிறிதோர் மொழியின் கிளையென்று சொல்வது அதைப்பற்றிக்குறைகூறுவதாக நினைத்துக்கொள்ளலாகாது. அங்ஙனம் நினைப்பது குறுகிய நோக்கத்தையும் குருட்டுத்தன்மையையும் காட்டுகின்றது. தமிழையும் மலையாளத்தையும் என்னிருகண்களைப் போன்றே நான் மதிக்கின்றேன். இருகண்களில்ஏதேனுமொன்றுக்கு மேன்மை ஏற்றமும் மற்றதற்கு மேன்மைக்குறைவும் நினைப்பாருளரோ? கைகளில் வலதுகை மேன்மை உடையதாக நாம் கருதுகிறோம். ஆனால், கண்களைக்குறித்த மட்டிலும் குருடர்கூட அத்தகைய வேற்றுமை பாராட்டுவதில்லை. தேசப்பற்றும் மொழிப்பற்றும் மற்றெவ்வகைப்பற்றும் உண்மைப்பற்றிற்குக் கீழேயாம்.

மலையாளமொழியின் வரலாற்றைப்பற்றியுள்ள ஓர் சில புலவர்களின் கொள்கை வியப்பை அளிக்கின்றது. இம்மொழி மட்டுமன்று, தமிழுங்கூட, ஸம்ஸ்கிருதத்தின் புதல்விகள் என்று கூறுவோரும் இதுபோழ்து இருக்கின்றனர். இப்பொருள்பற்றிப்பின்னொரு தருணத்தில் பேசலாமெனக் கருதியுள்ளேன்.

இறுதியாக இன்னும் ஒருவார்த்தை கூறி என்கட்டுரையைமுடித்துவிடுகிறேன். தாய்மொழிப்பற்றில்லாமனிதனை

உண்மையில் மனிதனுக்கருத இடனில்லை. தமிழ்த்தாயின் மக்கள் தமிழர் மட்டுமன்று; சற்று ஆராய்ந்து நோக்குங்கால் மலையாளத்தவரும் அவ்வன்னையின் மக்களென உணரலாகும். தமிழ் அன்னாது தாய்மொழியின் தாய்மொழியன்றோ; ஆகவே, அவர்கள் தமிழைப்புறக்கணிக்கமாட்டார்களென யான் உறுதியாய்நம்புகிறேன். மலையாளத்தாரனைவரும் தமிழைக்கற்றுணர்வது நலமாயிருக்கும். இந்நாட்டுத்தமிழர்கள் மலையாளம் கட்டாயம் பயிலல்வேண்டும். தமிழ்மொழிப் பற்றுள்ள சிலர் வடமொழியாகிய ஸம்ஸ்கிருதத்தைப் புறக்கணித்துத்தள்ளுகிறார்கள். இது பெரிதும் வருந்தற்பாலது. பலநூற்றாண்டுகளாக நம்முன்னோர்களின் வாழ்க்கையையும் நம் தாய்மொழியையும் பாதித்திருக்கும் ஸம்ஸ்கிருதத்தைப் பயிலவேண்டியது இன்றியமையாதது. ஆனால், இத்துடன் நின்றுவிடலாகாது. கதிரவன் இதுகாலை தோன்றுமிடம் கீழ்த்திசையல்ல. பண்டைக்காலத்தில் சூரியன் கீழ்த்திசையிற்றோன்றி மேற்றிசையில் அணைந்துவந்தான். ஆனால், இக்காலத்தோ எனின் அவன் மேற்றிசையிலுதித்துக்கீழ்த்திசையில் அணைந்துவருகின்றான். ஞான சூரியன் மேற்றிசையினின்றும் எழும்புகிறான். சூரியநமஸ்காரம் அவ்விடத்தை நோக்கிச் செய்யுமின்! மேற்றிசைப்படிப்பைக்கொண்டு, மெய்யறிவெய்த முயலவேண்டும். கீழ்நாட்டுப்புலமையுடன் மேனாட்டுக்கல்வியையும் கொணர்ந்து இசையுமின்! அனைத்திற்கும் கடவுளை நம்பி உங்கள் காரியத்தில் தலையிடுமின்! கருணையங்கடலாகிய பரம்பொருள் உங்களுக்கும் உங்களது இவ் இலக்கியக்கழகத்துக்கும் நீடித்த ஆயுளையும் நிறைந்த கல்விச்செல்வத்தையும் அளிக்குமாறு மனமார வழுத்துகின்றேன்.